மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 100/2022 |
| பெயர் | : | (PW5 திரு.வெள்ளத்துரை / LW8) |
| த/பெ. க/பெ | : | ஆறுமுகம் |
| வயது | : | 63 |
| கிராமம் | : | ஆலங்குளம் |
| தாலுகா | : | ஆலங்குளம் |
| Calling | : | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |

(A1, A2, A3 were present. Petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of July 2026

<u>முதல் விசாரணை</u>

1) கடந்த 15.03.2021-ம் தேதி இரவு 20.00 மணிக்கு புளியம்பட்டி காவல் நிலைய முதல் நிலைய காவலர் திரு.கணேசன் 1512 என்பவர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தூத்துக்குடி மாவட்டம், சிங்காத்தாங்குறிச்சி லெட்சுமணன் மகன் பரமசிவன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.17/2021 பிரிவுகள் 441, 294(பி), 352, 506(II) இதச உ/இ 109 இதச ஆக வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்தார்.

வழக்கு கோப்பினை பெற்றுக்கொண்டு 16.03.2021-ம் தேதி காலை சுமார் 6.00 மணிக்கு உதவி ஆய்வாளர் ஆகிய நான் வழக்கு கோப்பினை பெற்றுக்கொண்டு சம்பவயிடம் சாட்சிகள் சப்பாணி, குமரவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **(மேற்படி வரைபடம் அ.சா.ஆ.. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4) பரமசிவன், கருப்பசாமி, சுரேஷ், ராமசாமி, சப்பாணி, குமரவேல், முதல் நிலை காவலர் திரு.கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் அவரது ரகசிய புலன் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை எனதெரிய வருகிறது.

5) எதிரிகளை தேடிவந்தபோது மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றத்தில் CRL MP(MD)No.4898 of 2021 in CRL OP (MD) No.4519 of 2021 பிரகாரம் எதிரிகள்

முன்ஜாமின் பெற்று நீதிமன்ற பிணையில் சென்றதால் எதிரிகளை கைது செய்ய முகாந்திரம் இல்லை.

5) கடந்த 07.08.2021 அன்று புலன் விசாரணையை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 441, 294(பி), 352, 506(II) உ/இ 109 இதச-ன் படி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் சம்பவம் நடநத்நதாகசொல்லப்படம்இடம் மணித்தடம் என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடம் 3வது நம்பராக காட்டப்பபட்டுள்ளளது காற்றாடி இறகு என்றால் சரிதான். மேற்படி காற்றாடி இறகை ஒட்டி சம்பவம் நடந்தது பார்வை மகசரிலோ துலங்காது. எனது புலன் விசாரணியில் சம்பவம் நடந்ததகா சொல்லப்படுவது காற்றாடி இறகுகளை ஒட்டி இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் புஞ்சை நிலம் என்றால் சரிதான். அந்த நிலம் அ.சா.1 க்கு பாத்தியப்பட்டதா அல்லது அவரது கம்பெனிக்கு பாத்தியப்பட்டதா என்ற விபரத்தை நீதிமன்றத்தில் தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கும் மேற்படி கம்பெனியில் எந்த பணியில் இருந்தார் என்ற ஆவணங்களோ அல்லது ஒப்பந்தங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) அ.சா.1 புகார் மனுவில் விசாரணையில் சொல்லியுள்ள இரும்பு கம்பியை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் 3 மணி நேரம் கழித்து தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 ல் புகார்மனுவிலோ விசாரணையிலோ 3 அடி கம்பியை வைத்து தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த சொல்லப்படும் இடத்தில் 50 வடமாநில நபர்கள் இருந்தார்கள் என்று அ.சா.1 கூறியது அவர்களை நான் விசாரித்து வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான் நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் அசா 1 புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது உண்மை இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்களை எல்லாம் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பொய்யான புகாரினைப்பெற்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பின்னிட்டு

தேதியில் தயார் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/–Tr.A.Dharanidharan
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.